## கவனிக்க வைக்கும் சிங்களப் படம்!

இலங்கையைச் சேர்ந்த திரைப்பட இயக்குநர் பிரசன்னா விதானகே ஒரு சிங்களர் என்றாலும், தமிழர்களின் மீதான ஒடுக்குமுறைகளையும் ஒதுக்கல்களையும் தொடர்ந்து, தன் திரைப்படங்களில் முன்வைப்பவர். குறிப்பாக, அவரது 'பிறகு' என்ற திரைப்படம் முன்னாள் இலங்கை ராணுவ வீரனுக்கும் அவனால் மணம் முடிக்கப்பட்ட தமிழ்ப்பெண்ணுக்கும் இடையிலான உறவையும் முரணையும் பேசிப் பலரின் கவனத்தையும் ஈர்த்தது. பல திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு, பல விருதுகள் பெற்று, இப்போது அமேசான் பிரைம் ஓ.டி.டி தளத்தில் வெளியாகியிருக்கும் 'பாரடைஸ்' (PARADISE) திரைப்படமும் ஓர் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த திரைப்படமே.

தங்கள் திருமண நாளைக் கொண்டாடுவதற்காக ஒரு கேரளத் தம்பதி இலங்கைக்கு வருகிறார்கள். கடும் பொருளாதார நெருக்கடியில் இலங்கை சிக்கித்தவித்த, இலங்கை மக்கள் போராட்டத்தில் குதித்த காலகட்டத்தின் தொடக்கத்தில் இந்தக் கதை நிகழ்கிறது. தம்பதியில் கணவன் நெட்பிளிக்ஸ் தளத்துக்காக சமர்ப்பித்த கதை, ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மகிழ்ச்சியுடன் அந்தத் தம்பதி இலங்கையைச் சுற்றிப் பார்க்கிறார்கள். ஆனால், கணவனின் திரைக்கதை ஆவணங்கள் அடங்கிய ஐபோனும் லேப்டாப்பும் சிலரால் திருடப்படுகிறது. சிங்கள காவல்துறையின் விசாரணை சித்ரவதையில் ஈழத்தமிழ் இளைஞன் கொல்லப்படுகிறான். அதன் பின் என்ன நடக்கிறது என்பதே கதை.

ஈழத்தமிழர், மலையகத்தமிழர், இஸ்லாமியர் ஆகியோரைக் குற்றவாளிகளாகக் கருதும் சிங்கள மேலாதிக்க மனநிலையைத் திரைப்படம் அழுத்தமாகச் சித்தரிக்கிறது. 'இதுதான் சீதையை ராவணன் சிறைப்படுத்திய இடம்', 'இதுதான் சீதையை அனுமன் சந்தித்த இடம்' என்று சுற்றுலா வழிகாட்டி சொல்லும்போது சிறுபுன்னகையுடன் கேரளப்பெண், “நீங்கள் சொல்வது வால்மீகி ராமாயணம். உலகம் முழுக்க 300 ராமாயணங்கள் இருக்கின்றன, சமண ராமாயணத்தில் சீதைதான் ராவணனை வெல்வாள். ராமன் வெறும் தேரோட்டிதான்” என்று சொல்லும் இடம் அர்த்தப்பூர்வமானது. கதையோட்டத்தின் ஊடாக ராமாயணத்தில் செயற்படும் அதிகார மனநிலையையும் 'பாரடைஸ்' திரைப்படம் கேள்விக்குள்ளாக்குகிறது.

பல்வேறு அரசியல் நுட்பங்களைக் கொண்ட இந்தத் திரைப்படம் அனைவரும் பார்க்கவேண்டிய ஒன்று.

## :ப்ளாஷ்பேக்





கே.ராஜேந்திரன்

### நிறைவான தருணம்!

1993-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 3 அன்று சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் என்னுடைய இணையேற்பு விழா நடைபெற்றது. என் சகோதரர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ச.க.வெங்கடேசன் அவர்கள், விழாவை முன்னின்று நடத்தி வைத்தார். இணையேற்பு விழா முடிந்ததும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து, வாழ்த்துப் பெறச் சென்றோம். கழகப் பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களும் உடனிருந்தார். எங்கள் வாழ்க்கையின் நிறைவான தருணம் என்று இதைக் குறிப்பிடுவேன்.

**– கே.ராஜேந்திரன்,**
**பொதுக்குழு உறுப்பினர், செய்யூர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### நாட்டைக் காக்க நிதி!

1962-இல் சீனப் போரை எதிர்கொள்ள இந்தியப் பாதுகாப்பு நிதியை அரசியல் கட்சிகள் திரட்டின. கழகத்தின் சார்பில், பேரறிஞர் அண்ணாவும், கலைஞரும் 35 ஆயிரம் ரூபாயைத் திரட்டிக் கொடுத்தனர். அன்றைய அரசியல் கட்சிகள் கொடுத்த நன்கொடையில் இதுவே மிக அதிகம்.

# சீரணி ⇒ இளைஞர் அணி


22

**ந.வினோத்குமார்**

திமு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் 'சீரணி முதல் இளைஞர் அணி வரை'...

## சீரணிச் செய்திக்கு 'சீரணி'!

ஓவியம் : ரவி பேலட்



*திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் ஓராண்டு ஆட்சி குறித்து, மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பத்திரிகையாளர்களுக்கு ஒரு **'பிரஸ் டூர்'** ஏற்பாடு செய்ததைப் பற்றி, நாம் சில வாரங்களுக்கு முன்பு பார்த்தோம். அப்போது அவர்கள் சீரணி பற்றி எழுதிய போது, 'நிதி வசதிக்கேற்ப, தமிழகம் முழுவதற்கும் பொதுவான வார அல்லது மாத இதழ் ஒன்றினை சீரணி உறுப்பினர்களுக்காக நடத்துவது, அவர்களுக்குள் தொடர்பினை வளர்க்க மட்டுமல்ல, சீரணியினரின் பணிகளைப் பிறருக்கும் பிற்காலத்துக்கும் உணர்த்துவதற்கு ஓர் அரிய சாதனமாகவும் அமையும்' என்று ஆலோசனை தெரிவித்திருந்தார்கள்.*

*சீரணிக்கு என தனி இதழ் எதுவும் உருவாகவில்லை. ஆனால், தமிழ்நாடு அரசின் கிராம வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, 'கிராம நலம்' என்ற பெயரில், மாத இதழை நடத்தி வந்தது. அது காந்தி நூற்றாண்டு விழாவையொட்டி, 1969-இல் 'சீரணி' என்று பெயர் மாற்றப்பட்டு வெளிவந்தது. 1970-இல், **'கிராம வளர்ச்சி'** துறையே **'ஊர் வளர்ச்சி'** என்று மாறியது. இன்று **'ஊரக வளர்ச்சி'** துறையாக அறியப்படுகிறது.*

**ஒவ்வொரு மாதமும் குழந்தைகள் மலர், மகளிர் மலர், திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு மலர், பொங்கல் இதழ், கூட்டுறவு இதழ் என ஒவ்வொரு கருப்பொருளில் சிறப்பிதழாக மலர்ந்தது.**

“அரசினர் வெளியீடு என்றாலே, சிலருக்கு அலட்சியமாகத் தோன்றும். என்ன இருக்கப் போகிறது என்று வெறுப்போடு கூறுவர். சீரணி இதழைக் கண்டால் அவர்கள் தங்கள் கருத்தை மாற்றிக் கொள்வார்கள். தரமான கதைகள் இருக்கின்றன; தமிழ் கொஞ்சும் கவிதைகள் இருக்கின்றன; இனிமையான இலக்கியக் கட்டுரைகளும் உள்ளன. இத்தனைக்கும் இடையே கரும்பு போல் இனிமையான முறையில் அரசினர் செய்திகள், ஆக்கவேலைகள், அரும்பணிகள் இடம் பெற்றிருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒளிவீசும் முத்துகள் படித்துப் பயன் பெற வேண்டிய, பாதுகாக்கப்பட வேண்டிய சொத்துகள்.

தமிழர்களின் இல்லந்தோறும் இடம் பெற வேண்டிய 'சீரணி' இதழை, அதன் பயனறிந்து பண்புடன் காத்து வளர்க்க வேண்டியது, எழுத்தாளர்களின் கடமையும், படிப்போரின் பொறுப்புமாகும். எனவே, சீரணி இதழை நூலகங்களோடு நிறுத்தாமல், இல்லங்கள் தோறும் இருக்கும் வகையில், பரப்ப வேண்டுகிறேன்” என்று வாசகரும், தூத்துக்குடி மாவட்ட தமிழ் எழுத்தாளர் மன்றத்தின் செயலாளருமான நா.புகழேந்தி என்பவர் எழுதிய வாசகர் கடிதத்திலிருந்து **'சீரணி'** இதழில் என்ன மாதிரியான படைப்புகள் வெளிவந்தன என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

பாராட்டுகள் மட்டுமல்ல, சில ஆலோசனைகளும்கூட வாசகர் கடிதத்தில் பிரதிபலித்துள்ளன. பழனி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியரான நா.ஆறுமுகம் என்பவர் எழுதிய கடிதத்தில், “பல ஆரம்பப் பள்ளிகளில் 'சீரணி' இதழ் தருவித்துப் படிக்கின்றோம்; பயனும் பெறுகின்றோம். சீரணியில் உள்ள செய்திகள், கதைகள், கட்டுரைகள் ஆகியவை நன்மை பயக்கும்படி உள்ளன. ஆனால், சிறார்களுக்கோ உளம் குளிர வழியில்லை. சீரணியில் சிந்தை குளிரச் செய்திகள் பலவுண்டு. இருப்பினும், சீர் தூக்கிப் பார்க்கின்ற சிறுவர் பகுதியில்லை, சிறுவர்க்குக் கதையில்லை. அவர் மகிழ நகைச்சுவையில்லை. ஆகவே, ஆக்கிடுவீர் சிறுவர் பகுதி! போக்கிடுவீர் அவர் தம் ஏக்கம்!” என்று வாசகர் மன்றாடினார்.

அந்த இதழில், அரசுத் துறைகள் பற்றிய செய்திகள் முதன்மையான இடத்தைப் பிடித்தாலும், சீரணி அமைப்பு குறித்த செய்திகளும் இடம்பெற்றன. ஒவ்வோர் இதழிலும், சீரணியின் அன்றைய தனி அலுவலர் க.பரமசாமி, ஒவ்வொரு மாவட்டத்திலும் மேற்கொள்ளப்பட்டு வரும் சீரணிப் பணிகளைத் தொகுத்து, கட்டுரையாக எழுதி வந்தார்.

அந்த இதழ் ஒவ்வொரு மாதமும் குழந்தைகள் மலர், மகளிர் மலர், திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு மலர், பொங்கல் இதழ், கூட்டுறவு இதழ் என ஒவ்வொரு கருப்பொருளில் சிறப்பிதழாக மலர்ந்தது. மேலும் 'பஞ்சாயத்து ராஜ்', 'இன்டென்சிவ் அக்ரி கல்ச்சர்' உள்ளிட்ட ஆங்கில இதழ்களிலிருந்து விவசாயச் செய்திகள் தேர்வு செய்யப்பட்டு, தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டன.

இவ்வாறு பல்சுவை தாங்கி வந்த இதழாக 'சீரணி' இதழ் அமைந்திருந்தது.

**...வெற்றிநடை போடும்.**

# பொய்ப்பெட்டி

22

**கோவி.லெனின்**

“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் – விடையும்...”

## சி.பி.ஐ. யாருக்கு அஞ்சுகிறது?

***கள்ளக்குறிச்சி விஷச் சாராயச் சாவுகள் உட்பட அரசுக்கு எதிரான வழக்குகளில் சி.பி.ஐ. விசாரணையை எதிர்கொள்ள தி.மு.க. அஞ்சுகிறது, என்று அ.தி.மு.க, பா.ஜ.க. போன்ற கட்சிகள் குற்றம் சாட்டுகின்றனவே?***

*தி.மு.க எந்த விசாரணைக்கும் ஒருபோதும் அஞ்சியதில்லை. சர்க்காரியா கமிஷனை எதிர்கொண்டு அதில் யார் புகார் கொடுத்தார்களோ, அவர்களே தங்களிடம் ஆதாரம் ஒன்றும் இல்லை என்று சொல்லி, தெறித்து ஓடும் நிலைமைக்கு உள்ளானதை அறிவோம்.*

*2-ஜி வழக்கில் சிறப்பு நீதிமன்ற நீதிபதி, “இத்தனை ஆண்டு காலம் காத்திருந்தேன். குற்றம் சாட்டிய ஒருவர் கூட ஓர் ஆதாரத்தைக் கூட கொண்டு வரவில்லை” என்று சொன்னதையும் நாடு பார்த்தது. எந்த வழக்காக இருந்தாலும், எந்த விசாரணை அமைப்பாக இருந்தாலும், அதை எதிர்கொள்ளக்கூடிய துணிவு திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு உண்டு.*

**“இந்த வழக்கில் சி.பி.ஐ தன்னுடைய மனதை முழுமையான அளவில் செயல்படுத்தி நேர்மையான விசாரணையை மேற்கொள்ளவில்லை!”**



*சி.பி.ஐ விசாரணையைப் பொறுத்தவரை, அது நேர்மையானதாக இருக்க வேண்டும் என்பதை, இந்தியாவில் உள்ள எதிர்க்கட்சிகள் அனைத்தும் வலியுறுத்துகின்றன. பிரதமர் மோடி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு, சி.பி.ஐ. அமலாக்கத் துறை, வருமான வரித்துறை உள்ளிட்ட அனைத்தும் ஆளுங்கட்சியின் ஏவலுக்கு உள்ளாகி இருப்பதை, எதிர்க்கட்சிகள் மீதான நடவடிக்கைகள் மூலமாக காண முடியும்.*

*சி.பி.ஐ.யின் இந்த பாரபட்சமான அணுகு முறையை நீதிமன்றங்களும்கூட கண்டித்துள்ளன. தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான மக்கள் போராட்டத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு குறித்து நடைபெற்ற சி.பி.ஐ விசாரணை எந்த லட்சணத்தில் இருக்கிறது என்பதை, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.*

*சி.பி.ஐ.க்குப் போதுமான அளவில் திறன் இருந்தும் தரவுகளைச் சேகரிக்கக்கூடிய வாய்ப்புகள் இருந்தும் அது சுதந்திரமாகச் செயல்படவில்லை என்றும், நிராயுதபாணியான பொதுமக்கள் பயந்து ஓடிய நேரத்தில், அவர்கள் மீது குறி வைத்து, துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு இருக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ள நீதிபதிகள், “இந்த வழக்கில் சி.பி.ஐ தன்னுடைய மனதை முழுமையான அளவில் செயல்படுத்தி நேர்மையான விசாரணையை மேற்கொள்ள வில்லை” என்று கூறி இருக்கிறார்கள்.*

*தமிழ்நாட்டு மக்களின் மனதில் இருந்து, இன்னும் மறையாத தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை துப்பாக்கிச் சூடு விவகாரத்திலேயே சி.பி.ஐ. இந்த அளவுக்குக் கண்டனத்துக்கு உள்ளாகி இருக்கிறது என்றால், அது மற்ற வழக்குகளை எந்த அளவில் விசாரிக்கும் என்பதை தி.மு.க மீது குற்றஞ்சாட்டக்கூடிய கட்சிகளே அறியும். ஆனாலும் அரசியல் பிழைப்பு நடத்தியாக வேண்டுமே!*

...வினா தொடரும்.

# திராவிடத்தால் வாழ்கிறோம்

557

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131